புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

==========================================================

# 'கல்லறைகள்' நாவலில் கிறிஸ்தவச் சிந்தனைகள்

==========================================================

**ஆய்வாளர்**
**ச.ஸ்டெபி**
*பதிவு எண் : 21113114022036*
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வார், தமிழ்த்துறை,*
*நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,*
*மார்த்தாண்டம் – 629165*

**நெறியாளர்**
**முனைவர்.சா.மேகலின்சந்திரா,**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,*
*நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,*
**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,**
*மார்த்தாண்டம் – 629165.*
*திருநெல்வேலி.*

==========================================================

**ஆய்வுச் சுருக்கம்:**

*சமூகத்தில் வாழும் மனிதர்களுக்குப் படைப்புகள் வாயிலாகச் சீர்த்திருத்தச் சிந்தனைகளைப் படைப்பாளிகள் வெளிப்படுத்துவர். அதன் வழியாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திச் சமூகத்தை நெருக்கிக் கொண்டிருக்கும் அவலங்களை மாற்றி ஒரு புதிய சமூகத்தை உருவாக்குவர். அந்த வகையில் 'கல்லறைகள்' நாவல் சமூகச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான சீர்திருத்தச் சிந்தனைகளை முன்வைக்கிறது.*

ஐசக் அருமை ராஜன் 'கல்லறைகள்' என்ற நாவலில் கிறிஸ்தவர்களின் பகுதியைச் சார்ந்த நிலையைக் கூறியதோடு அவர்கள் பின்பற்ற வேண்டிய சீர்திருத்தங்களையும் முன் வைக்கிறார். கிறிஸ்தவச் சீர்திருத்தம் என்பது சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நீக்கி சமத்துவச் சமுதாயம் காண வழிகாட்டுவதாக அமைய வேண்டும். உழைக்கும் மக்களுக்கு வாழ்வழிக்காத பொருளாதார நிலையை மாற்றி அமைக்கப் பாடுபட வேண்டும்,என்ற இக்கருத்தினை ஆசிரியர் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். கிறிஸ்து எதற்கெல்லாம் எதிராக நின்றாரோ அவைகளையெல்லாம் ஆதரிக்கும் விதமாகவே இன்றைய கிறிஸ்தவம் வளர்ந்துக் கொண்டிருக்கிறது. கிறிஸ்தவன் என்பவன் நீதிக்காகச் செயல்பட வேண்டும், என்ற கருத்தும் இக்கட்டுரையில் முன்வைக்கப்படுகிறது.

கிறிஸ்தவத்தின் அடிநிலைக் கொள்கைக்கும் கம்யூனிசத்திற்கும் இடையே அதிக வேறுபாடு இல்லை. இரண்டும் ஒடுக்கப்பட்ட மக்களின் நலனை மனதில் எண்ணியே செயல்படுகின்றன. கிறிஸ்தவச் சிந்தனைகளுக்கும் பொதுவுடைமைக் கருத்துக்களுக்கும் இடையே அதிக வேறுபாடில்லை என்ற கருத்தை வலியுறுத்கிறது. சமுதாய நல் நடத்தையே கிறிஸ்தவச் சீர்திருத்தச் சிந்தனையின் அடிப்படை நோக்கமாக அமைகிறது. தனி மனிதனாலும், ஏற்றத் தாழ்வுகளாலும், சமுதாயப் பிரச்சனைகளாலும் கிறிஸ்தவச் சிந்தனைகள் தடம் மாறிப் போய்க் கொண்டிருக்கின்றன. கிறிஸ்துவை கிறிஸ்தவர்கள் வியாபாரப் பொருளாக்குவதை எதிர்க்கும் ஐசக் அருமைராஜன் உண்மையான கிறிஸ்தவன் இந்த நாட்டில் மலர வேண்டும் இந்த நாவலில் கூறுகிறார்.

சமூக நன்மையை மனதில் கொண்டு இத்தகைய சீர்திருத்த சிந்தனைகளைக் இக்கட்டுரையில் காணமுடிகிறது. வறுமையின் அவலங்களை மக்கள் உணர்ந்தால் ஒழிய வறுமையை ஒழிக்க முடியாது. எதனால் வறுமைப்பட்டு கிடக்கிறோம் என்ற எண்ணம் மக்கள் மனதில் தெளிவாகத் தோன்ற வேண்டும். கிறிஸ்தவம் ஐரோப்பியர்களால் உலகம் முழுவதும் பரப்பப்பட்டது. நாட்டின் பல வளர்ச்சிப் பணிகளுக்கும் கிறிஸ்தவம் வித்திட்டது. இதனை இந்நாவல் எடுத்தியம்புகிறது. இதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

***முன்னுரை:***

ஒரு படைப்பாளி தன்னைப் பாதித்த நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு அதன் சிக்கல்களை வெளிக் கொணரும் முகமாகப் படைப்பை உருவாக்கித் தருகிறான். பொதுவாகச் சமுதாயச் சிக்கல்களே படைப்புகளின் மையச் பொருளாக விளங்குகின்றன. கதை இலக்கியங்களைப் பொறுத்தவரை ஒரு கதையை உருவாக்கி, அந்தக் கதையை வளர்த்துச் செல்லும் நிகழ்வுகளின் ஊடே இந்தச் சமூகச் சிக்கல்களைக் கூறி, இச்சிக்கல்களால் மனிதன் அல்லது சமுதாயம் அடையும் துன்பங்களைப் புலப்படுத்துகிறான். இங்ஙனம் சிக்கல்களை முன்னிறுத்தி படைக்கப்படும் படைப்புகளில் ஆங்காங்கே சீர்திருத்தக் கருத்துகளை படைப் பாளிகள் வெளியிடுவதும் உண்டு. அந்த வகையில் ஐசக் அருமை ராஜனின் நாவலில்

வெளிப்படும் சமுதாயச் சிக்கல்களையும் அவற்றைத் தீர்ப்பதற்காக அவர் நாவலில் கூறும் கிறிஸ்தவ சீர்த்திருத்தச் சிந்தனைகளையும் இந்த கட்டுரைஆய்கிறது.

**கிறிஸ்தவமும் சீர்திருத்தச் சிந்தனைகளும்**

கிறில்துவை கடவுளுடைய மகனாகக் கொண்டு உலகின் பல பகுதிகளிலும் பரவிய மதமாக கிறிஸ்தவ மதம் காட்சி தருகிறது. கிறிஸ்தவத்தை ஐரோப்பியர்கள் உலகம் முழுவதிலும் பரப்பினர். அவ்வாறு இந்தியாவிலும் மேல்நாட்டினரால் கொண்டு வரப்பட்டு போதிக்கப் பட்டது. ''வாணிகத்துக்காக வந்த ஐரோப்பியர்கள் இந்தியரைக் கிறிஸ்தவ மதத்தில் சேர்க்கவும் முயற்சி செய்து வந்தார்கள். இந்துக்களை கிறிஸ்தவராக்கும். பொருட்டு அநேக பாதிரிமார்களை ஐரோப்பிய தேசங்களிலிருந்து அழைத்து வந்தார்கள்.'' – (மயிலை சீனி வேங்கடசாமி – 2006) கிறிஸ்தவர்கள் ஐரோப்பியர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது மேற்கூறிய கருத்தின் வாயிலாக அறிய முடிகின்றன.

நாட்டில் பல வளர்ச்சிப் பணிகளுக்கும் கிறிஸ்தவம் வித்திட்டது எனலாம். கன்னியாகுமரி மாவட்டத்திலும் கிறிஸ்தவம் அதிவேகமாக வளர்ச்சி பெற்றது. பள்ளிகள், கல்லூரிகள், மருத்தவமனைகள் என்று கிறிஸ்தவ இயக்கங்களால் மக்களும் பயனடைந்து வருகின்றனர். 'கல்லறை' நாவலில் ஐசக் அருமைராஜன் அவர்கள் கிறிஸ்தவத்தின் நிலைமையைம் குறித்தும், கிறிஸ்தவம் எப்படி சீர் பெற வேண்டும் எனவும் பல கருத்துக்களைக் கூறியுள்ளார்.

**கிறிஸ்தவச் சிந்தனை:**

*மதம் என்ற ஒன்று அனைத்து மக்களும் ஒன்று படுவதற்காக ஏற்ப்படுத்தப்பட்ட அமைப்பே ஆகும். அதில் ஏற்றத் தாழ்விற்கு இடம் இல்லை. கிறிஸ்தவ மதம் சமத்துவ சமுதாயம் மலர வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. ஆனால் பூரண வெற்றியை அதனால் பெற முடியவில்லை. எனவே கிறிஸ்தவம் கம்யூனிசத்திற்கு இடம் தர வேண்டும். கம்யூனிஸ்ட் தான் உண்மையான கிறிஸ்தவன் என்ற எண்ணம் வளர வேண்டும். அப்போதுதான் சமத்துவ சமுதாயம் பிறந்து ஏற்றத் தாழ்வு நீங்கி வறுமைப் பிணி ஒழியும். கிறிஸ்தவ மிஷனெரிகளால் அடித்தட்டு மக்களும் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் வேகமான முன்னேற்றத்தை நோக்கி பயணித்தனர்." - (ஐசக் அருள்தாஸ் - 2010) இவ்வாறாக கிறிஸ்தவத்தை மிஷனெரிகள் வேகமாகப் பரப்பி வந்தனர்.

*கிறிஸ்தவனாக இருந்து நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் அல்லது பிறரை நசுக்கிறீர்கள். ஆகவே சமத்துவ சமுதாயம் காண இளைய சமுதாயத்திற்கு வழிவிடுங்கள் என்ற கோரிக்கையை கிறிஸ்தவ மக்களிடம் முன்வைக்கிறார் ஆசிரியர். ''மவள ஒரு பத்து வருஷத்துக்கு முன்னால டாக்டருனா கிறிஸ்தவ டாக்டரு கிட்டத்தா போவானிய, வக்கீல்னா கிறிஸ்தவ வக்கீலான பாத்துப் போவானிய, கிறிஸ்தவ வக்கீல்னா மனசாட்சி இல்லாதவனி

*சொல்லுக்கானிய இதெல்லாம். உண்ம மவளே ! குலசேகரத்துல செல்வராஜனி ஒரு டாக்டர், கிறிஸ்தவன் ஒரு கெழவிக்கு டிஸ்டில் வாட்டர.. அதான் வெறும் தண்ணிய ஊசில குத்தி விட்டுற்றான். அது நீரு வச்சி, ஜலம் வச்சி.. சே.. சே..இவனியலாம் மனுஷமாரா? நாப்பயலுவ". கிறிஸ்தவம் எவரையும் பகைக்காது. அனைவரையும் ஏற்றும் கொள்ள வேண்டும் என்ற இலட்சியத்துடன் செயல்பட வேண்டும். (ஐசக் அருமைராஜன் – 1982) கிறிஸ்தவர்கள் சமத்துவ நிலையோடு வாழ வேண்டும் என்று இங்கு வலியுறுத்தப்படுகிறது .*

***கிறிஸ்தவத்தின் நிலைமை:***

*'எல்லோரும். இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பாராபரமே' என்ற தாயுமானவர் குரலை உயர்த்துவதாகவே கிறிஸ்தவ மிஷனெரிகள் வருகை அமைந்தது. மக்கள் அனைவரும் நலம் பெற வேண்டும். அனைவருக்கும் உணவு, உடை கிடைக்க வேண்டும். என்றே பாடுபட்டது கிறிஸ்தவம் . காலம் செல்லச் செல்ல கிறிஸ்தவத்தின் எண்ணம் மாறி விட்டது. நாவலில் வரும் செல்வமணி என்ற பாத்திரம் கிறிஸ்தவச் சிந்தனைகளையும் சமத்துவ சமுதாயம் காண கிறிஸ்துவின் அன்பையும் பின்பற்ற வேண்டுகோள் விடுக்கிறது. கிறிஸ்தவப் பாதிரிமார்கள் பலரும் அருளுரைக் கூறுவதோடு தங்கள் கடமையை முடித்து விடுகின்றனர்.*

*கிறிஸ்தவனாக வாழ்வதை விட கிறிஸ்துவுக்காக வாழ வேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே வளர வேண்டும். எளிய கிறிஸ்தவ வாழ்க்கையை எவ்வளவு ஆடம்பரமான வாழ்க்கையாக மக்கள் மாற்றிக் கொண்டு விட்டனர் என வருந்துவதை நாவலில் உணர இயல்கிறது. 'புத்தம் வீடு' நாவலில் பனைவிளைக் கிராமத்து மக்ககளிடையே காணப்படும், மதம் சார்ந்த நிகழ்வுகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. ('ஹெப்சிபா ஜேசுதாசன்' - 1964) கிறிஸ்துவுக்காக வாழ வேண்டும். என்ற நிலை இங்கு காணப்படுறது.*

***கிறிஸ்தவத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்துதல்:***

*கிறிஸ்தவத்தை அறிந்தவர்கள் அனைவரும் அதன் உண்மையான நிலையை அறிந்து அதனை வெளிப்படுத்தல் வேண்டும். கிறிஸ்தவத்தின் உண்மை நிலையை அறியாதவர்களுக்கு அது போதிக்கும் செய்திகளை அறிவிக்க வேண்டும். பாதிரிமார்களும் கிறிஸ்தவத்தை முழுமையாக அறிந்தவர்களும் உண்மை கிறிஸ்தவத்தை போதிப்பதனால் கிறிஸ்தவம் புகழ் பெற வாய்ப்பிருக்கிறது. "ரிங்கல் தெளபே, மீட்ஐய்யர் ஆகிய முதல் பாதிரியார்கள் கடற்கரையிலும் (மீனவர்களுக்கிடையேயும் உள் நாட்டிலும் நாடார்களுக்கிடையேயும்) கிறிஸ்தவ மத மாற்றங்கள் காலனிய ஆட்சி மற்றும் கிறிஸ்தவம் ஆகியவற்றின் ஆதரவோடு திருவிதாங்கூர் சமஸ்தான மனுதர்ம சாதி ஏற்பாடுகளுக்கு எதிராக நடந்த சமூக எழுச்சிகள். தோள்சீலைப் போராட்டம் ஆகியவை குறிப்பிடப்படுகிறது. (பொன்னீலன் 2010) பாதிரிமார்களின் வரவினால் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன என்பதை இதன்வழியாக அறிய முடிகிறது.*

*கிறிஸ்துவின் செயல்களை போதனைச் செய்யுமாறும். சமூகத்தில் நடைமுறைப் படுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கிறார். "இன்ணெக்கி கிறிஸ்தவன்னி சொல்வனியன்ல ஒருத்தன் கூட உண்மையான கிறிஸ்தவன் கெடையாது. நீ பாருவள... இந்த மொதலாளி தேவசகாயம் இந்த தேவாலயத்துல பெரிய மனுஷன், இந்த மாசிலாமணி பெரிய உபதேசி இவனுவ எல்லாம் எவ்வளவு சின்னப் பயலுவனி நமக்குத் தெரியும்!. ஏசுவானவரு சொன்னதுல ஒரு சின்ன விஷயத்தக் கூட கொண்டு நடக்கத் தெரியாதவனிய! என்ற செல்வமணியின் கூற்றின் வாயிலாக கிறிஸ்தவத்தின் உண்மை நிலையைப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர். (ஐசக் அருமைராஜன் - 1982). கிறிஸ்துவின் செயலைப் போதனை செய்யும் நிலை இங்கு உணர்த்தப்படுகிறது.*

***வறுமைக்கான காரணங்கள்:***

*காரணம் இல்லாமல் நிகழ்வுகள் இல்லை. உலகின் அனைத்து நிகழ்வுகளுக்கும் காரணம் இருந்து கொண்டு தான் இருக்கிறது. அனைத்து வளங்களும் நிறைந்த நம் நாட்டில் வறுமை நிலவுகின்றது என்றால் காரணங்கள் இருக்கின்றன. பொருளாதார ரீதியாகப் பின் தங்கியுள்ள நம் நாட்டில் வறுமையின் பிடியில் சிக்கி வாடும் மக்கள் பலர். பாறைவிளை தேவசகாயம் - அவர் பரம்பரை முழுவதுமே ஏழைகளை ஏமாற்றிப் பணக்காரர்களாக வந்தவர்கள் தாம் ஏழைகளின் உழைப்ச் சுரண்டி அவர்கள் பட்டினியைப் பரிசாக்கி, சொகுசாக வாழ கற்றவர்கள் அவர்கள்" கதையாசிரியர் கூறுவதிலிருந்து சுரண்டும் வர்க்கம் ஏழை மக்களை வாழவிடுவதில்லை என்பது உறுதியாகின்றது.*

***வறுமையின் அவலங்கள்:***

*வறுமையின் அவலங்களை மக்கள் உணர்ந்தால் ஒழிய வறுமையை ஒழிக்க முடியாது. எதனால் வறுமைப்பட்டுக் கிடக்கிறோம் என்ற எண்ணம் மக்கள் மனதில் தெளிவாகத் தோன்றவில்லை. அதனை உணர்த்தவே தற்கால இலக்கிய வாதிகள் பலரும் முயன்று வருகின்றனர்.*

1. *உணவு இன்மை*
2. *உடையின்மை*
3. *உறைவிடம் இன்மை*
4. *வரதட்சணை*
5. *பட்டினிச் சாவு*
6. *மரியாதை இன்மை*
7. *வட்டிக்குப் பணம் வாங்குதல்*

*ஐசக் அருமைராஜனும் கிறிஸ்திய சிந்தனைகளோடு வறுமையின் அவலநிலைகளை கல்லறைகள் நாவலோடு பொருத்திக் காட்டியுள்ளார்.*

**தொகுப்புரை:**

*கிறிஸ்துவை கடவுளுடைய மகனாக் கொண்டு ஐரோப்பியர்களால். உலகம் முழுவதிலும் பரப்பப்பட்டது கிறிஸ்தவம் அவ்வாறு இந்தியாவிலும் மேல் நாட்டினரால் கொண்டு வரப்பட்டு போதிக்கப்பட்டது. இம்மதம் அன்பு, சகோதரத்துவம் போன்ற நல்ல பண்புகளை போதிப்பதால் வேகமாக இந்தியாவில் பரவியது நாட்டின் பல வளர்ச்சிப் பணிகளுக்கும் கிறிஸ்தவம் வித்திட்டது எனலாம். சமூக நன்மையை மனதில் கொண்டு இத்தகைய கிறிஸ்தவச் சீர்திருத்தச் சிந்தனைகளை ஐசக் அருமைராஜன் தம் நாவல் மூலம் எடுத்தியம்புகிறார்.*

**துணைநூற்பட்டியல்**


*1. ஐசக் அருமைராஜன் - கல்லறைகள்*
*முதல் பதிப்பு. 1982*
*பூக்கூடைப் பதிக்கம்*
*BoxNo : 501*
*சென்னை-600 094.*

*2. ஐசக் அருள் தாஸ் - குமரி மண்ணில் கிறிஸ்தவம்*
*முதல் பதிப்பு ஜூன் 2010*
*ஷெல்லி ஸ்டுடியோ*
*அலெக்சந்திரா பிறஸ்ரோடு*
*நாகர்கோவில்-629 001*

*3. பொன்னீலன் - மறுபக்கம்*
*முதல் பதிப்பு ஏப்ரல் 2010*
*நான்காம் பதிப்பு செப்டம்பர் 2012*
*நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி லிட்)*
*41-6. சிட்கோ இண்டஸ் டிரியல் எஸ்டேட்,*
*அம்பத்தூர் சென்னை-600 098*

*4.மயிலை சீனி வேங்கடசாமி - கிறிஸ்தவமும் தமிழும்*
*முதல் பதிப்பு அக்டோபர் 2006*
*நாம் தமிழர் பதிப்புகம்*
*10/14, தோப்பு வெங்கடாசலம் தெரு*
*திருவல்லிக்கேணி – சென்னை 5*

*5. ஹெப்சிபா ஜேசுதாசன் - புத்தம் வீடு*
*முதல் பதிப்பு ஜூன் 1964*
*சுதர்சன் புக்ஸ்*
*74 மணி மேடை கிழ்ப்புறம்*
*நாகர்கோவில் - 629 001.*